**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 201/2025**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சூரிய பிரகாஷ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கருப்பையா** | **Calling** | : | **டிரைவர்** |
| **Village** | : | **காந்திநகர் காலனி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **35** |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. சூரிய பிரகாஷ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 11.04.2022 ம் தேதி எனது அப்பா கருப்பையா ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால், அது சம்மந்தமாக இடம் பார்த்துவிட்டு TVS XL வண்டியில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டு இருந்தபோது மாலை சுமார் 05.00 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக ஆறுமுகம் என்பவர் எனக்கு போன் செய்து சொன்னார். எனக்கு 06.30 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடமான நாமக்கல் ரோடுவேஸ், செங்குளம் பிரிவு அருகே சென்று பார்த்து போது, இன்னோவா கார் ஒன்று என் அப்பா வண்டி மீது மோதிய நிலையில் இருந்தது. என் அப்பாவை ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். அங்கு இரண்டு நாட்கள் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு திண்டுக்கல் சிட்டி மருத்துவமனைக்கு என் அப்பாவை சிகிச்சை அளித்தோம். என் அப்பாவிற்கு கை, கால்களில் எலும்பு முறிவு, தாடை எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. அங்கு சிகிச்சை அளித்தும் முடியவில்லை என்று சொன்னதால் மீண்டும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். பிறகு 27.04.2022ம் தேதி என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரி தான் என் அப்பாவின் மீது மோதிய இன்னோவா காரை ஓட்டி வந்தவர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்ல, சொல்ல புகார் மனுவை எழுதினார்கள். அதை 27.04.2022ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

நான் எட்டாம் வகுப்பு வரைப் படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் திண்டுக்கல் கிரேஸ் ஆம்புலன்ஸ் வண்டியை ஓட்டிக் கொண்டு இருந்தேன். சம்பவத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் இருந்த இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் என்று கேட்டால், சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் 06.30 மணிக்கு வந்தேன். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது சுமார் 20 பேர் கொண்ட கூட்டம் அங்கிருந்தது. ஆஜர் எதிரி தான் காரை ஓட்டிக் கொண்டு வந்தார் என்று எனக்கு ஆறுமுகம் சொன்னார். ஆறுமுகம் தான் மேற்படி விபரத்தினை சொன்னார் என்று போலீசார் விசாரணையில்

சொல்லியிருக்கிறேனா என்றால், சொல்லியிருக்கிறேன். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது என் அப்பா ஓட்டிய வண்டி சாலைக்கு மேற்குப் பக்கம் மண் தரையில் கிடந்தது. இந்த விபத்திற்கு முன்பாக உடல்நிலை சரியில்லாமல் கை, கால்களில் கட்டுப்போட்டு சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வண்டி ஓட்டும் உரிமம் உள்ளதா என்றால், இல்லை. என் அப்பாவிற்கு குடி பழக்கம் இல்லை. நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, எதிரி ஓட்டி வந்த வாகனம் சாலையின் மேற்கு பக்கம் மண் தரையில் இருந்தது. சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து விசாரித்தார்களா என்றால், நான் போகும் போது விசாரித்துக் கொண்டு இருந்தார்கள். என் அப்பா அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து, பிறகு சிட்டி மருத்துவமனைக்கு மாற்றிய போது நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் சரிதான். சிட்டி மருத்துவமனையில் இருந்து எனது அப்பாவை வீட்டிற்கு அழைத்துச் சென்றோம் என்றால் சரியல்ல, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்குத்தான் அழைத்துச் சென்றோம். மீண்டும் தனியார் மருத்துவமனையில் இருந்து அரசு மருத்துவமனைக்கு மாற்றிய சிகிச்சை விபரங்களை போலீசாரிடம் கொடுத்து இருக்கிறேனோ என்றால், கொடுத்து இருக்கிறேன். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.12 17:19:04 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**

C.C. 201/2025

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஆறுமுகம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கதிர்வேல்** | **Calling** | : | **கம்பி வேலி காண்ராக்டர்** |
| **Village** | : | **செட்டிநாயக்கன்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 53 |
| | | | **Dated** | : | 12.03.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. ஆறுமுகம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கம்பி வேலி போடும் காண்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 13.04.2022ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நாங்கள் வேலை முடிந்து சாலையைக் கடப்பதற்காக நாமக்கல் ரோடுவேஸ் அருகே நின்று கொண்டு இருந்தபோது, எங்கள் ஊர்க்காரரான கருப்பையா என்பவர் சாலையை TVS XL வண்டியில் கடந்தார். அப்போது இண்டிகா வண்டி ஒன்று வேகமாக வந்து கருப்பையா மீது மோதிவிட்டது. நாங்கள் உடனே அங்கு ஓடிச் சென்று ஆம்புலன்ஸை வரவழைத்து அவரை சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

கருப்பையாவின் மகன் சூரியாவிற்கு நான் தகவல் சொன்னேன். இண்டிகா வண்டியை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி அருண்குமார். அருண்குமார் விபத்திற்கு பிறகு வண்டியைவிட்டு இறங்கி வந்து தன்னுடைய பெயர் மற்றும் விபரங்களை என்னிடம் சொன்னார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவத்தை நேரில் பார்த்தற்கு சாட்சியாக அதை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். எந்த தேதியில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று நினைவில்லை. அதன்பிறகு கருப்பையா இறந்துவிட்டதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அசா. 1 ஐ எனக்கு இருபது வருடங்களாகத் தெரியும். அசா. 1ன் தகப்பனார் கருப்பையாவை 25 ஆண்டுகளுக்கு மேலாகவே தெரியும். கருப்பையாவின் அப்பா பெயர் தெரியுமா என்றால், தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகே எனக்கு சொந்தமாக வீடு மற்றும் கடை இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தினைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடம் அருகில் நான் மட்டும் தனியாக நின்று கொண்டு இருந்தேன். நான் நின்று கொண்டு இருந்த இடத்திற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், 10 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு மேற்கு பக்கம் கிழக்கு பக்கமாக போவதற்காக நின்று கொண்டு இருந்தேன். நான் சாலையைக் கடக்க நின்று கொண்டு இருந்தபோது டம் என்ற சத்தம் கேட்டுத்தான் நான் திரும்பிப் பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் சுமார் 10 முதல் 20 நபர்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள்

என்றால் சரிதான். அந்த கூட்டத்தினை நான் விலக்கிவிட்டுத்தான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். நான் பார்த்த போது காயம்பட்ட நபர் எந்த திசையில் இருந்தார் என்றால், கிழக்குப் பக்கம் விழுந்துவிட்டார். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தார்களா என்றால், கால் மணி நேரத்தில் வந்துவிட்டார்கள். போலீசாருக்கு நான் தகவல் சொன்னேனா என்று கேட்டால், பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ்க்கு நான் போன் செய்யவில்லை என்றால் சரிதான், கூட்டத்தில் இருந்தவர்கள் செய்தார்கள். சம்பவத்திற்கு முன்பாக எதிரியின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. 108 ஆம்புலன்ஸில் நான் காயம்பட்ட நபருடன் அரசு மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தவுடன் ஆம்புலன்ஸில் காயம்பட்ட நபரை ஏற்றிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றும், காயம்பட்ட நபர் வயதானா காரணத்தினால் தானாக ஓட்டிக் கொண்டுபோய் விபத்தினை ஏற்படுத்திக் கொண்டார் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.12 17:19:13 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.